சென்னை, எழிலகத்தில், நேற்று (21.07.2025) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தலைமையில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம், இணையவழி பட்டா மாறுதல் மற்றும் இதர திட்டங்கள் தொடர்பாக நில அளவை, நிலவரித்திட்ட துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வு கூட்டத்தில் Naksha திட்டம் நடைபெறும் 10 மாவட்டங்களுக்கு 200 DGPS நில அளவை கருவிகளை அமைச்சர் வழங்கினார். இந்நிகழ்வின்போது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பெ.அமுதா. நில நிர்வாக ஆணையர் கே. எஸ். பழனிச்சாமி. நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் ராஜகோபால் சுன்கரா, நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை கூடுதல் இயக்குநர் அ. கண்ணபிரான், கூடுதல் இயக்குநர் (மறு நில அளவை) எம். வெங்கடேசன், இணை இயக்குநர் வ. சரவணன், நில அளவை பதிவேடுகள் துறை, அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர்!

நேற்று (21 – 7 – 2025) தொடங்கியது!

1. கல்வி வளாகங்களில் சாதிய வன்முறை!

திமுக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி கண்டனம்!

மேற்கு வங்கம் காரக்பூர் ஐஐடியில் கடந்த ஏழு மாதங்களில் நான்கு மாணவர்கள் இறந்துள்ளதற்கு வருத்தம் தெரிவித்த திமுக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் உயர் கல்வி வளாகங்களில் தொடர்ந்து சாதிய வன்முறையால் மாணவர்கள் இறப்பது குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர் கேட்டுள்ளதாவது:

உயர் கல்வி நிறுவனங்களில் சமத்துவத்தை மேம்படுத்துவதற்காக மத்திய பல்கலைகழகங்களில் அமைக்கப்படும் சம வாய்ப்பு பிரிவுகள் பல்கலைக் கழக மானியக்குழுவின் விதிமுறைகள், 2012இன் படி அமைக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு அமைக்கப்பட்டுள்ள பிரிவுகளின் எண்ணிக்கை விவரங்கள் என்ன? அவை இன்னும் முழுமையாக அமைக்கபடாததற்கான காரணங்கள் என்ன?

கல்லூரி/பல்கலைக்கழக வளாகங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் வன்முறை நிகழ்வுகள் குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டும் மத்திய பல்கலைக்கழகங்களில் நடந்த இத்தகைய சம்பவங்களின் விவரங்கள், கல்லூரி வாரியாக/பல்கலைக்கழக வாரியாக வெளியிட வேண்டும். பாகுபாட்டை எதிர்கொண்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் அல்லது அரசு வழங்கிய ஆதரவு மற்றும் உதவிகளின் விவரங்கள் என்ன?

சாதி அடிப்படையிலான பாகுபாட்டால் எழும் குறைகளை நிவர்த்தி செய்ய அரசாங்கம் வகுத்துள்ள கூடுதல் வழிமுறைகள் என்ன?

2. பின்தங்கிய மாவட்டங்களில் மாதிரி கல்லூரிகள்

டி. மலையரசன் கோரிக்கை!

கல்வியில் பின் தங்கியுள்ள மாவட்டங்களில் 374 மாதிரி கல்லூரிகளை உருவாக்குவதாக ஒன்றிய அரசு முன்மொழிந்திருந்ததை சுட்டிக்காட்டி அதன் தற்போதைய நிலை என்ன என்று கள்ளக்குறிச்சி திமுக மக்களவை உறுப்பினர் டி. மலையரசன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் கல்வியில் பின் தங்கிய மாவட்டங்களை கண்டறியும் வரையறைகள் என்ன? இதுவரை தமிழ்நாட்டில் கண்டறியப்பட்டுள்ள அத்தகைய மாவட்டங்கள் எத்தனை? இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு? கல்லூரிகள் கட்டி முடிக்கப்பட தேவைப்படும் கால அவகாசம் என்ன? இக்கல்லூரிகளில் தரமான கல்வியை வழங்குவதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன? போன்ற பல்வேறு விவரங்களையும் அவர் கோரியுள்ளார்.

3. இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி! நாடாளுமன்றத்தில் கோரிக்கை!

சி.என்.அண்ணாதுரை

ஜி.செல்வம்

பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) திட்டத்தின்கீழ் தமிழ் நாட்டில் உருவாக்கப் பட்டுள்ள பயிற்சி மையங்கள் எத்தனை, அதில் அளிக்கப்படும் பயிற்சி விவரங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை என்ன என்பது குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை மற்றும் ஜி.செல்வம் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் மையங்கள் எந்தெந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன?

தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளாக இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி விவரங்கள், பயிற்சி பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள், வணிக சங்கங்கள் அல்லது தனியார் துறை முதலாளிகளுடன் இப்பயிற்சிக்காக அரசு செய்துள்ள ஒப்பந்தங்களின் விவரங்கள் என்ன?

மற்றும் தமிழ்நாட்டில் PMKVY பயனாளிகளுக்கு சிறந்த வேலை வாய்ப்பை உறுதி செய்வதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? போன்ற கேள்விகளையும் அவர்கள் எழுப்பியுள்ளனர்.

4. தமிழ்நாட்டில் ஐடிஐகளின் செயல்பாடுகள்

அ.மணி கேள்வி!

தமிழ்நாட்டில் செயல்படும் தொழில் பயிற்சி மையங்களின் (ஐடிஐ) விவரங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் தருமபுரி மக்களவை உறுப்பினர் அ. மணி கேள்வி எழுப்பியுள்ளார்.

தர்மபுரி மாவட்டத்தில் செயல்படும் தொழில் பயிற்சி மையங்களின் எண்ணிக்கை மற்றும் விவரங்கள், அதில் வழங்கப்படும் படிப்புகள் மற்றும் சேர்க்கை விவரங்கள் என்ன? ஐடிஐகளில் கிடைக்கும் பயிற்சி மற்றும் உள்கட்டமைப்பின் தரத்தை அரசாங்கம் எவ்வாறு மதிப்பீடு செய்கிறது? புதிதாக தமிழ்நாட்டில் ஒன்றிய அரசாங்கம் நிறுவ முன்மொழிந்துள்ள ஐடிஐகளின் விவரங்கள் என்ன? பயிற்சி தரங்களை மேம்படுத்த, வேலைவாய்ப்பை உறுதி செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

5. தங்க நகைக்கடன் விதிமுறைகளை மறுபரிசீலனை செய்க!

தங்க தமிழ்செல்வன்

கணபதி ராஜ்குமார்

தங்க நகைகள் மீது வங்கிகள் கடன் வழங்குவதற்கான விதிமுறைகளில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்த இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) வரைவு வழிகாட்டுதல்களை மறுபரிசீலனை செய்யக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் ஒன்றிய அரசுக்கு எழுதிய கடிதத்தை சுட்டிக்காட்டி திமுக மக்களவை உறுப்பினர்கள் தங்க தமிழ்செல்வன் மற்றும் கணபதி ராஜ்குமார் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

தங்கப் பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் 2025 ஐ மறுபரிசீலனை செய்ய வேண்டும், 2 லட்சம் வரையிலான விவசாயம் மற்றும் விவசாயம் தொடர்பான கடன்களுக்கு தங்கத்தை பிணையமாக ஏற்றுக்கொள்வதை தொடர வேண்டும். மேலும் கடன் வழங்குவதற்கான விதிமுறைகளின் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துமாறும் RBI-க்கு அறிவுறுத்தச் சொல்லி ஒன்றிய அரசுக்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் எழுதிய கடித்தத்திற்கு ஒன்றிய அரசின் பதில் என்ன? என்று அவர்கள் கேட்டுள்ளனர்.

6. தமிழ்நாட்டில் புதிதாக கேலோ இந்தியா மையங்கள்!

டி.எம்.கதிர் ஆனந்த் கோரிக்கை!

தமிழ்நாடு முழுவதும் மற்றும் வேலூர் மக்களவைத் தொகுதியில் கேலோ இந்தியா மையங்களை (கேஜசி) திறக்க அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்கள் குறித்து வேலூர் மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர், கடந்த ஐந்து ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டிலும் இந்த மையங்களில் விளையாட்டு உள்கட்டமைப்பை நிறுவுதல், செயல்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன என்றும் மேலும் இத்திட்டத்தின் நோக்கத்தை மேம்படுத்த ஒன்றிய அரசாங்கத்திடம் உள்ள திட்டங்கள் என்ன என்றும் கேட்டுள்ளார்.

7. அகமதாபாத்தில் விமான விபத்துக்கான காரணங்கள் என்ன?

டாக்டர் கனிமொழி சோமு கேள்வி!

ஜூன் 12, 2025 அன்று அகமதாபாத்தில் ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளான துயர் மிகுந்த சம்பவத்திற்கான காரணங்கள் குறித்து மாநிலங்களவையில் திமுக மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர் கேட்டுள்ளதாவது :

இந்த விபத்தில் இறந்தவர்கள்/காயமடைந்தவர்களின் எண்ணிக்கை என்ன?

பயணிகள் தவிர மற்றவர்கள் உட்பட பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீடு எவ்வளவு?

இதுவரை ஒன்றிய அரசு ஏதேனும் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதா?

இந்த விபத்திற்கு காரணமாக யாரேனும் தனி நபர் அல்லது ஏதேனும் நிறுவனம் செய்த நாசவேலை வெளிச்சத்திற்கு வந்துள்ளதா?

இந்த விபத்துக்கு பொறுப்பானவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? மற்றும் எதிர்காலத்தில் இது போன்ற விபத்து நிகழாமல் இருக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன?

சேலம் மாவட்டத்தில் சீரான குடிநீர் விநியோகம் மற்றும் நகர்ப்புற தூய்மை தொடர்பாக அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, முன்னிலையில் நேற்று (21.07.2025) மாவட்ட ஆட்சியர் அ அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. உடன் கூடுதல் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி, மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரவிக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

அமைச்சர் எஸ்.ரகுபதி பங்கேற்று இறுதி மரியாதை செலுத்துவார்!

கேரள அரசியலில் புரட்சிகர மரபை ஆழமாக விட்டுச் சென்றுள்ளார் தோழர் வி.எஸ்.அச்சுதானந்தன்! செவ்வணக்கம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, ஜூலை 22-

கேரள மாநில முன்னாள் முதல்வர் அச்சுதானந்தன் (வயது 102) அவர்கள் நேற்று இயற்கையெய்தினார். இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் "கேரள அரசியலில் புரட்சிகர மரபை ஆழமாக விட்டுச் சென்றுள்ளார் தோழர் வி.எஸ்.அச்சுதானந்தன்! செவ்வணக்கம்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் முதல்வர் அவர்கள் சார்பிலும் மக்கள் சார்பாகவும் அச்சுதானந்தன் அவர்களின் இறுதிச் சடங்கில் அமைச்சர் எஸ்.ரகுபதி பங்கேற்று மரியாதை செலுத்துவார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் (மலையாளத்தில்) பதிந்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

"தோழர் வி.எஸ். அச்சுதானந்தன் அவர்கள் கேரளத்தின் அரசியல் மனச்சான்றில் ஆழப் பதிந்த தொரு புரட்சி மரபை விட்டுச் சென்றிருக்கிறார்.

மக்களின் மனங்கவர்ந்த தலைவர், இறுதி மூச்சு வரையில் பொதுவுடைமைவாதி, முன்னாள் முதலமைச்சர் என கொள்கை அரசியலுக்கும், பொதுத் தொண்டுக்கும் இலக்கணமாக அவர் திகழ்ந்தார்.

வி.எஸ். எனும் ஒரு மிகப் பெரும் ஆளுமையை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள், மற்றும் கேரள மக்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

மாபெரும் தலைவரான வி.எஸ். அச்சுதானந்தன் அவர்களுக்கு எனது சார்பிலும் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும் அமைச்சர் ரகுபதி நேரில் இறுதி மரியாதை செலுத்திடுவார்.

செவ்வணக்கம் தோழரே!"

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வேலூர் தொகுதியில்

கேலோ இந்தியா மையம் தொடங்கப்படுமா?

மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி. ஜூலை 22 -

விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் குறிப்பாக வேலூர் மக்களவைத் தொகுதியில் கேலோ இந்தியா மையங்களை (KIC) ஒன்றிய அரசு தொடங்குமா? என்று நாடாளுமன்ற மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாடு முழுவதும் மற்றும் வேலூர் மக்களவைத் தொகுதியில் மேலும் கேலோ இந்தியா மையங்களைத் (KIC) திறக்க ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள் யாவை? இல்லையென்றால், அதற்கான

காரணங்கள் தருக?

கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் இந்த மையங்களில் விளையாட்டு உள்கட்டமைப்பை நிறுவுதல் / உருவாக்குதல்> செயல்படுத்துதல் மற்றும் மேம்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள்; மற்றும் இத்திட்டத்தின் நோக்கத்தை மேம்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இதற்கு ஒன்றிய அரசின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மண்டவியா எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் 1250 கேலோ இந்தியா மையங்களைத் (KIC) திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் இதுவரை அறிவிக்கப்பட்ட அனைத்து KICS களின் விவரங்களும் https://dashboard.kheloindia.gov.in/statewisekheloindia centers எனும் வலை தளத்தில் காணலாம்.

கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் KICகளில் விளையாட்டு உள்கட்டமைப்பை நிறுவுதல் / உருவாக்குதல். செயல்படுத்துதல் மற்றும் மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் https://dashboard.kheloindia.gov.in/statewisekheloindiacenters எனும் வலை தளத்தில் காணலாம்.

மேலும் இத்திட்டத்தின் நோக்கத்தை மேம்படுத்த ஒன்றிய அரசுக்கு தற்போது உத்தேசம் ஏதுமில்லை. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

மயிலம் ஒன்றியம் ரெட்டணை ஊராட்சியில்

"உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை!

மயிலம், ஜூலை 22 -

மயிலம் ஒன்றியம் ரெட்டணை ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். ஒன்றிய பெருந் தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் மைலம் ஊராட்சி ஒன்றியம் ரெட்டனை ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகா ம்நடைபெற்றது.

மைலம் ஒன்றிய பெருந் தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார்.

முகாமின் கண்காணிப்பு அலுவலரும், ஊரக வளர்ச்சி துறை உதவி இயக்குனருமான தணிகை ரெத்தனமாலா முன்னிலை வகித்தார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டு 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தினை தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து வரப் பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார். தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதையடுத்து வேளாண்மை தோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளுக்கு வேளாண் இடு பொருட்களையும், மயிலம் வட்டார அரசு மருத்துவமனை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தையும், ரத்த அழுத்தம், சர்க்கரை நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இல்லம் தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரை பெட்டகம் அடங்கிய தொகுப்பினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்.

அப்போது உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாமிற்கு மனு கொடுக்க வந்த மகளிர் கூறுகையில் மகளிர் உரிமைத் திட்டத்தில் விடுபட்டவர்களுக்கு நிச்சயம் மகளிர் உரிமைத் தொகையை முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்அவர்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் மயிலம் ஒன்றியம் ரெட்டனை ஊராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் ஏராளமான மகளிர்கள் மனு செய்துள்ளதாக மகளிர்கள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன், ஒன்றிய கவுன்சிலர்கள் ராஜ்பரத், ஜெயந்திசேகர், சரசு முருகன், ஊராட்சி மன்ற தலைவர்கள் குமுதா ரமேஷ், பாபு, சந்திரசேகர், உள்ளிட்டதுறை சார்ந்த அலுவலர்கள், திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் வடக்கு மு.மாவட்ட பிரதிநிதி ஆலந்தூர் கோ.ராஜ்வேல் ரா.கல்பனா ஆகியோர் மகள் ஆர்.அபிநயா – ஜெ.நவீன்குமார் ஆகியோர் திருமணம் அண்மையில் நடைபெற்றது. இந்நிலையில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களது இல்லம் சென்று மணமக்களை வாழ்த்தினார். உடன் பகுதிச் செயலாளர் ப.குணாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், தலைமை கழக பேச்சாளர் க.ஓப்பிலாமணி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் கலாநிதி குணாளன், தி.மு.காமராஜ், இ. உதயகுமார், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கோ.பிரவீன்குமார், பகுதி சிறுபாண்மை பிரிவு அமைப்பாளர் எஸ்.காஜா மொய்தீன், துணை அமைப்பாளர்கள் எஸ்.தீனதயாளன், இ.எம்.பாரூக், ஏ.திலீப், எஸ்.தனபால், மற்றும் ஆர்.கல்யாணகிருஷ்ணன், ஜெ.விஜயகுமார், ஆர்.வேதாந்தகிருஷ்ணன், ஜெ.ஹேமநாதன், ஆர்.ராஜா, ஆர்.பவித்ரா, ஏ.மோகன், என்.முரளி உள்ளிட்டோர் இருந்தனர்.